# 'விடைத்தாள்களை புதிய முறையில் திருத்த எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டங்கள்'



திருநெல்வேலியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கிறார் மூட்டா பொதுச்செயலர் சுப்பாராஜு.

**திருநெல்வேலி, டிச. 2:** திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் விடைத்தாள்களை பரவலாக்கப்பட்ட மதிப்பீட்டு முறையில் திருத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மூட்டா பொதுச் செயலர் சுப்பாராஜு, போராட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் நாகராஜன் ஆகியோர் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது:

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தேர்வுப்பணிக்கான ஊதிய உயர்வு கோரி கடந்த 11 ஆம் தேதி முதல் ஆசிரியர்கள், அலுவலர்கள் விடைத்தாள் திருத்தும்பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம் 23 ஆம் தேதி சங்க நிர்வாகிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி அனைத்து தேர்வு பணிகளுக்கும் ஊதிய உயர்வு வழங்க துணைவேந்தர் ஒப்புதல் அளித்தார்.

இந்நிலையில் நவம்பர் தேர்வு விடைத்தாள்களை அனைத்து கல்லூரிகளுக்கும் பரவலாக அனுப்பி திருத்தப் போவதாக அறிவித்துள்ளார். துணைவேந்தரின் இந்த திடீர் முடிவு தேர்வுப் பணிக்கு உயர்த்தப்பட்ட ஊதியத்தை வழங்காமல் இருப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவாகக் கருதுகிறோம். பரவலாக்க மதிப்பீட்டு முறையில் ஆசிரியர்களுக்கு விடைத்தாள் திருத்தும் பணிக்கான ஊதியம் மட்டும் வழங்கினால் போதும், பயணப்படி உள்பட இதர பலன்கள் வழங்க வேண்டியிருக்காது என்பதால் செலவு குறையும் என நிர்வாகம் கூறி வருகிறது.

பல்கலைக்கழக நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளுக்கு முன் விடைத்தாள்களை ஆசிரியர்களின் வீட்டு முகவரிக்கு அனுப்பி திருத்தியபோது தவறுகள் நடைபெற்றன. அதன்பின் இதுவரை விடைத்தாள்கள் மைய மதிப்பீட்டு முறையில் திருத்தப்பட்டு வருகிறது. இந்த முறையே அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் பொதுத்தேர்வுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நிர்வாகம் கல்வி நிலைக்குழு, ஆட்சிப் பேரவை மற்றும் ஆட்சிக்குழு அமைப்புகளில் ஆலோசிக்காமல் விடைத்தாள் திருத்த புதிய முறையைப் புகுத்துவது முறைகேடுகளுக்கும், ஊழலுக்கும் வழிவகுக்கும். மாணவர்களும் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, பரவலாக்கப்பட்ட மதிப்பீடு முறையில் விடைத்தாள்களைத் திருத்தும் முடிவை வாபஸ் பெறக் கோரி தொடர் போராட்டம் நடத்த பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழு முடிவு செய்துள்ளது. அதன்படி முதல்கட்டமாக இம் மாதம் 8 ஆம் தேதி பாளையங்கோட்டை ஜோதிபுரம் திடல், நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றனர்.

பேட்டியின்போது மூட்டா தலைவர் மனோகர ஜஸ்டஸ், அரசு கல்லூரி ஆசிரியர் கழக மண்டல தலைவர் அஜித் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# இலவச முதலுதவி சேவை தொடக்கம்



மோட்டார் சைக்கிள் மூலம் இலவச முதலுதவி அளிக்கும் சேவையை கொடியசைத்து தொடங்கிவைக்கின்றனர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளர் செந்தாமரைக்கண்ணன், நீதிபதி ஜெ. தமிழரசி.

**திருநெல்வேலி, டிச. 2:** திருநெல்வேலியில் தனியார் தொண்டு நிறுவனம் மூலம் இலவச மோட்டார் சைக்கிள் முதலுதவி சேவை வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டது.

திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் இயங்கி வரும் மகாசேமம் அறக்கட்டளை சார்பில், மோட்டார் சைக்கிள் மூலம் பொதுமக்களுக்கு இலவச முதலுதவி சேவை அளிக்கும் திட்டம் தொடக்க விழா நடைபெற்றது. இச்சேவையை மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளர் செந்தாமரைக்கண்ணன், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலரும், நீதிபதியுமான ஜெ. தமிழரசி ஆகியோர் கொடியசைத்து தொடங்கிவைத்தனர். நிகழ்ச்சியில் அமைப்பின் அறங்காவலர் சிவானந்தன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இச்சேவைக்காக 43 மோட்டார் சைக்கிளில் முதலுதவி அளிப்பதற்கு தேவையான மருத்துவ வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டம் முழுவதும் விபத்தில் காயம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சென்று முதலுதவி அளிக்கும் வகையில் இச்சேவை தொடங்கப்பட்டுள்ளதாக அமைப்பின் முதுநிலை மண்டல மேலாளர் டி.எஸ். சசிகுமார் தெரிவித்தார்.

# பல்கலை. யில் பேராசிரியர்களுக்கு பயிற்சி

**திருநெல்வேலி, டிச. 2:** திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் புதிய பேராசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புரிந்து கொள்ளுதல் என்ற தலைப்பில் பல்கலைக்கழக திட்டம் மற்றும் ஆசிரியர் மேம்பாட்டு மைய இயக்குநர் ராமகிருஷ்ணன், தரமான ஆராய்ச்சியில் பல்கலைக்கழகக்

## முதல்வர் நலம்பெற வேண்டி வழிபாடு



# தச்சநல்லூரில் ஆக்கிரமிப்புகள் அகற்றம்

**திருநெல்வேலி, டிச. 2:** திருநெல்வேலி தச்சநல்லூரில் ஆக்கிரமிப்புகள் வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டன.